செ.வெ.எண்-29 நாள்-11.03.2020

# பத்திரிக்கைச் செய்தி

மத்திய அரசின் தேசிய கால்நடை நோய் தடுப்பு திட்டத்தின் கீழ் அரியலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து கால்நடைகளுக்கும் UID மற்றும் Bar Code உடன் கூடிய காதுவில்லை அணிவிக்கப்பட உள்ளது. இத்திட்டத்திற்கு கால்நடை வளர்ப்போர் முழுமையாக ஒத்துழைக்க வேண்டும்.

தேசிய கால்நடை நோய் தடுப்பு திட்டத்தின் கீழ் அரியலூர் மாவட்டத்தில் முதலாவது சுற்று கால் மற்றும் வாய் நோய் தடுப்பூசி பணி, கடந்த 28.02.2020 முதல் மாடுகளுக்கு அளிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் தடுப்பூசி பணி செய்யும் முன் அனைத்து கால்நடைகளுக்கும் காதுவில்லை அணிவிப்பது இந்திய அரசினால் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. கால்நடைகளுக்கு அணிவிக்கப்படும் காதுவில்லை UID எண் விவரங்கள், தேசிய பால்வள மேம்பாட்டு வாரிய கால்நடை பெருக்கம் மற்றும் நலப்பணிகள் குறித்த தகவல் இணையத்தில் பதிவேற்றம் செய்யப்பட உள்ளது.

எனவே, கால்நடை பராமரிப்புத்துறை பணியாளர்கள் கிராமத்திற்கு வந்து தடுப்பூசி பணி செய்யும் போது காது அடையாள வில்லை பொருத்தப்படுவதற்கும் விவசாயிகள் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்.

இனி வரும் காலங்களில் அரசின் மூலம் செயல்படுத்தப்படும் நலத்திட்டங்கள், கால்நடை காப்பீடு போன்ற அனைத்திற்கும் காது வில்லை அடையாள எண் அவசியம் என்பதால் கால்நடை வளர்ப்போர் அனைவரும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும். மேலும் கால்நடைகளின் உரிமையாளர்கள் தங்களின் ஆதார் எண், கைபேசி எண் தவறாமல் முகாமிற்கு எடுத்து வந்து பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இத்திட்டத்தின் மூலம் இம்மாவட்டத்தில் உள்ள 1,65,800 கால்நடைகளுக்கு அடையாள எண் பொருத்த திட்டமிடப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**